

# அவிவா அஃப்ளுயன்ஸ்

AVIVA
| Life Insurance |

இந்த பாலிசியில் முதலீட்டு போர்ட்ஃபோலியோவில் உள்ள முதலீட்டு ஆபத்தை பாலிசிதாரரே ஏற்கிறார். இந்த இணைப்புடன் கூடிய காப்பீட்டுத் திட்டங்கள் ஒப்பந்தத்தின் முதல் ஐந்து வருடங்களில் எந்தவித ரொக்கத்தையும் (லிக்விடிடி) வழங்குவதில்லை. ஐந்தாவது வருட இறுதி வரை இணைப்புடன் கூடிய காப்பீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்த ரொக்கத்தை பாலிசிதாரர் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சரண்டர்/திரும்பப் பெற (வித்டிரா) முடியாது.

## அவிவா அஃப்ளுயன்ஸ் - ஒரு தனி நபர், யூனிட்டுடன் இணைந்த, பங்கு பெறாத, ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்திடுங்கள் மற்றும் உங்கள் நிதிகளில் இருந்து அதிகம் கோருங்கள். இருந்தபோதிலும், நல்ல நேரங்கள் எப்பொழுதுமே நீடித்திருக்க, உங்களுக்கு ஒரு நல்ல ஆயுள் காப்பீட்டுத் திட்டம் தேவை, அது எதிர்பாராத நிகழ்வுகளில் இருந்து உங்கள் குடும்பத்தை காப்பது மட்டும் அல்லாமல், உங்கள் ரொக்கத்தையும் பன்மடங்கு பெருக்கி மற்றும் நீங்கள் உங்கள் எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாமல் நிகழ்காலத்தை அனுபவிக்க உறுதி செய்கிறது. வழங்குகிறோம், அவிவா அஃப்ளுயன்ஸ், ஒரு திட்டம் அது ஒரு வேளை ஏதாவது துரதிர்ஷ்டவசமான நிகழ்வின் பொழுது, உங்கள் குடும்பத்திற்கு நிதிப் பாதுகாப்பை வழங்குகிறது மற்றும் சேமிப்பு விருப்பத் தேர்வு கலவையுடன் உங்கள் சொத்தை மேம்படுத்துகிறது.

அவிவா அஃப்ளுயன்ஸ் உங்களை வரையறையுடன் கூடிய காலத்திற்கு செலுத்துவதை அனுமதிக்கிறது மற்றும் நீண்டகால மைல்கல்லை சந்திப்பதற்கு, அதாவது உங்கள் குழந்தைக்காக அல்லது உங்கள் ஓய்வு காலத்திற்காகவும் மற்றும் பாதுகாப்புடன் இருக்கவும் முதலீடு செய்யவும். 7 திட்ட விருப்பத் தேர்வுகளில் இருந்து தேர்வு செய்து நீங்கள் உங்கள் வருமானத்தை மேம்படுத்தலாம் மற்றும் ஆபத்து ஏற்பதை மாற்றுவதன் மூலம் முறையையும் மாற்றுங்கள். எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாமல் உங்கள் குடும்பத்தின் ஆசைகளை சந்தித்திட இன்று செலவு செய்வதை அவிவா அஃப்ளுயன்ஸ் உறுதி செய்கிறது.

## ஒரு திட்டம் அது உங்கள் குடும்பத்தை நிதி ரீதியாகப் பாதுகாக்கிறது மற்றும் நீங்கள் அக்கறை எடுத்துக் கொள்ள உதவுகிறது.

### பிரத்யேக வடிவமைப்பு

- உங்கள் நீண்டகால இலக்கிற்கு பொருத்தமானபடி உங்கள் பாலிசி காலத்தைத் தேர்வு செய்யுங்கள்.
- உங்கள் வசதிக்கு ஏற்ப பிரீமியம் செலுத்துதலை 7, 10, 15 வருடங்கள் அல்லது பாலிசி காலம் முழுவதற்குமாக என தேர்வு செய்யுங்கள்.
- ஆபத்தை ஏற்கும் உங்கள் தன்மைக்கு சிறப்பாகப் பொருந்துமாறு 7 திட்டங்களில் இருந்து ஒரு திட்டத்தில் அல்லது சில திட்டங்களை சேர்ந்து முதலீடு செய்யவும்.
- சிஸ்டமேடிக் டிரான்ஸ்ஃபர் திட்டம் மூலம் பங்குச் சந்தையில் வாராவாரம் அல்லது மாதாமாதம் நுழைவதற்கு தேர்வு செய்யவும்.

### அணுகுமுறை

- எதிர்பாராத தேவைகளின் பொழுது, பகுதிப் பெறுதலின் மூலமாக உங்கள் ரொக்கத்தை நீங்கள் அணுகலாம்.
- உங்கள் திட்டமிடப்பட்ட தேவைகளுக்கு சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல் மூலமாகக் கையாளலாம்.
- எதிர்பாராத விதமாக நீங்கள் பெறும் ஆதாயங்களை எதிர்காலத்திற்காக டாப் அப் மூலமாக அதே சாதனத்தில் முதலீடு செய்யலாம்.

### வெகுமதி

- குறிப்பிட்ட கால இடைவெளியில், மைல்ஸ்டோன் பூஸ்டர்ஸ் மற்றும் முதிர்வு பூஸ்டர்ஸ் மூலமாக முதலீடு செய்து கொண்டிருப்பதற்கான வெகுமதியைப் பெறுங்கள்.

### பாதுகாப்பை உறுதி செய்யவும்

- அயுள் காப்பீட்டாளரின் எதிர்பாராத மரணத்தின் பொழுது ரொக்க உத்திரவாதத்தின் குறைந்தபட்சத் தொகையை உறுதி செய்திடுங்கள்.
- விபத்தின் மூலம் மரணம் ஏற்படுமாயின் கூடுதல் உத்திரவாதத் தொகை வழங்கப்படும்.

## தகுதி

<table>
<tr><td>நுழைவு வயது (கடைசி பிறந்த நாளின்படி)</td><td colspan="3">குறைந்தபட்சம்: 2 வருடங்கள் | அதிகபட்சம்: 50 வருடங்கள்</td></tr>
<tr><td rowspan="3">முதிர்வு வயது (கடைசி பிறந்த நாளின்படி)</td><td>பிரீமியம் செலுத்தும் காலம் (PPT)</td><td>முதிர்வில் குறைந்தபட்ச வயது</td><td>முதிர்வில் அதிகபட்ச வயது</td></tr>
<tr><td>7/10/15 வருடங்கள்</td><td rowspan="2">18 வருடங்கள்</td><td>65 வருடங்கள்</td></tr>
<tr><td>16 - 30 வருடங்கள்</td><td>70 வருடங்கள்</td></tr>
<tr><td rowspan="3">பாலிசி காலம் மற்றும் பிரீமியம் செலுத்தும் காலம்</td><td>பாலிசி காலம் (வருடங்களில்)</td><td>வரையறையுள்ள பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்களில்)</td><td>ரெகுலர் பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்களில்)</td></tr>
<tr><td>15-17 வருடங்கள்</td><td>10 வருடங்கள்</td><td>பாலிசி காலத்திற்கு நிகரானது</td></tr>
<tr><td>18-30 வருடங்கள்</td><td>7, 10 & 15 வருடங்கள்</td><td>பாலிசி காலத்திற்கு நிகரானது</td></tr>
</table>

**வருடாந்திரப் பிரீமியம்**

**ரெகுலர் பிரீமியம்:** குறைந்தபட்சம்

| பாலிசி காலம் | பிரீமியம் செலுத்தும் காலம் | வருடாந்திரப் பிரீமியம் (ரூபாய்களில்) |
|---|---|---|
| 15-17 வருடங்கள் | 10, பாலிசி காலத்திற்கு நிகராக | 2,00,000 |
| 18 & அதற்கு மேல் | 7 வருடங்கள் | 1,50,000 |
| | 10/15, பாலிசி காலத்திற்கு நிகராக | 1,00,000 |

அதிகபட்சம்: வரையறை இல்லை, குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு உட்பட்டது

**டாப் அப் பிரீமியம்:**
குறைந்தபட்சம்: ரூ.5,000
அதிகபட்சம்: வரையறை இல்லை, குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு உட்பட்டது

டாப்அப் பரீமியங்களின் மொத்தம் ரெகுலர் பிரீமியங்களின் மொத்தத் தொகையை மீறக் கூடாது.

**ரொக்க உத்திரவாதம்**

ரொக்க உத்திரவாதமானது, வருடப் பிரீமியத்தின் மடங்காகும் மற்றும் பாலிசி காலம் மற்றும் வயதைச் சார்ந்தது:

**குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம்:**

| பாலிசி காலம் (வருடங்களில்) | பிரீமியம் செலுத்தும் காலம் | குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம் (ரூபாயில்) |
|---|---|---|
| | | வருடாந்திரப் பிரீமியம் |
| 15-17 | 10, பாலிசி காலத்திற்கு நிகராக | 20,00,000 |
| 18 & அதற்கு மேல் | 7 வருடங்கள் | 15,00,000 |
| | 10/15, பாலிசி காலத்திற்கு நிகராக | 10,00,000 |

குறைந்தபட்ச டாப் அப் ரொக்க உத்திரவாதம் = 6250
இதில், குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம்: வருடாந்திரப் பிரீமியத்தின் 10 மடங்ககும்.
டாப் அப் பிரீமிய ரொக்க உத்திரவாதம்: டாப் அப் பிரீமியத்தின் 1.25 மடங்கு
**அதிகப்டச ரொக்க உத்திரவாதம்:**
அதிகப்டச ரொக்க உத்திரவாதமானது குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு உட்பட்டது

| ஆயுள் காப்பீட்டாளருக்கான நுழைவு வயது | பிரீமியம் செலுத்தும் காலம் PPT (வருடங்களில்) | அதிகபட்ச ரொக்க உத்திரவாத மடங்கு |
|---|---|---|
| <45 | 7 & 10 | அதிகபட்சம் (10, 0.5* பாலிசி காலம்) |
| | 15 - 30 | பாலிசி காலம் |
| >=45 | 7 & 10 | 10 |
| | 15 - 30 | பாலிசி காலத்தில் 5ஐ கழித்து வருவது |

**விபத்தின் மூலம் ஏற்படும் மரண அனுகூலம் உள்ளடக்கியது**

உள்ளடங்கிய விபத்தின் மூலம் ஏற்படும் மரண அனுகூலம் அடிப்படை ரொக்க உத்திரவாதத்திற்கு நிகரானது. அதிகபட்சம் ₹50 இலட்சத்திற்கு (ஒரு நபருக்கு) உட்பட்டது, இது அவிவா வழங்கிய முன்னரே உள்ள அனைத்து விபத்தினால் ஏற்படும் மரண அனுகூலக் காப்பீடுகளையும் சேர்த்து.
அதிகப்டச ரொக்க உத்திரவாதமானது குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு உட்பட்டது


**பிரீமியம் செலுத்தும் வீதம்**

வருடாந்திரமாக மட்டும்

## இந்தத் திட்டம் எப்படி வேலை செய்கிறது

35 வயதாகும், மேனேஜ்மென்ட் கன்சல்டன்ட்டான திரு. அரிஜித் டிரேஹன், தற்பொழுதைய ரொக்கத் தேவைகளைப்பற்றி கவலைப்படுவது இல்லை. இருந்தபோதிலும் அவர் அவரது குழந்தையின் திருமணத்திற்கு தேவையான ரொக்கம் கிடைப்பதை உறுதி செய்வதில் தீவிரமாக உள்ளார் மற்றும் வசதியான முதிய வயதிற்காக இப்பொழுதே வேலை செய்யத் துவங்கிவிட்டார்.

திரு. டிரேஹன் அவர்கள் **அவிவா அஃப்ளுயன்ஸை,** செலுத்தும் காலமான 10 வருடங்களுக்கு தேர்வு செய்துள்ளார், அது அவரது கனவு ஓய்வு வயதான 55 வயதோடு ஒத்துப் போகிறது மற்றும் பாலிசி காலமான 20 வருடங்கள் மைல்கல்லோடு ஒத்துப் போகிறது. அவர் ஒவ்வொரு வருடமும் 1.5 இலட்சம் பிரீமியம் செலுத்த முடிவு செய்திருக்கிறார்.




செலுத்திய மொத்த பிரீமியம் = **₹15,00,000**
முதிர்வில் மதிப்பு 8% அனுமான வருமானத்தில் = **₹3,488,766**
முதிர்வில் மதிப்பு 4% அனுமான வருமானத்தில் = **₹1,890,905**
அடிப்படை ரொக்க உத்திரவாதம்: **₹15,00,000**
விபத்தினால் ஏற்படும் ரொக்க உத்திரவாதம்: **₹15,00,000**

திரு. டிரேஹன் அவர்கள் முதிர்வுத் தொகையை அவரது குழந்தையின் திருமணத்திற்காக உபயோகித்துக் கொள்ளலாம் மற்றும் மீதம் உள்ள தொகையை ஓய்வுக் கால வருமானத்திற்காக பாதுகாத்துக் கொள்ளலாம்.


## உங்கள் அவிவா அஃப்ளுயன்ஸ் பாலிசியை மேம்படுத்திக் கொள்ள விருப்பத் தேர்வுகள் உண்டு

### டாப் அப்: உங்கள் நிதி மதிப்பை அதிகரித்துக் கொள்ள எதிர்பாராத விதமாக வரும் இலாபங்களை முதலீடு செய்வதற்கான வாய்ப்பு.

கூடுதலாக ரொக்கத் தொகையை முதலீடு செய்வதற்கான விருப்பத் தேர்வு

திரு. அரிஜித் டிரேஹன் அவர்கள் அவரது அலுவலகத்தில் ஒரு முக்கிய ஊழியர் ஆவார் மற்றும் அவர் தொடர்ந்து நிறுவனத்தில் இருப்பதற்காக அவர் ஒரு சிறப்பான போனஸைப் பெறுகிறார். அவர் அதை புதிய பாலிசி வாங்குவதற்கான கட்டணம் இல்லாமல், முன்னர் வாங்கியுள்ள பாலிசியில் முதலீடு செய்கிறார்.

8 வது மற்றும் 11 வது பாலிசி வருட ஆரம்பத்தில் டாப் அப் ரூ.4,00,000.




இந்த டாப் அப் பிரீமியம் முதிர்வு மதிப்பை அனுமான வளர்ச்சி விகிதமான 8% இல் ரூ.15,80,364 (4% அனுமான வளர்ச்சி விகிதத்தில் ரூ.10,16,869) என மேம்படுகிறது.

**டிஸ்கிளெய்மர் :** அனுமான வளர்ச்சி விகிதமான ஆண்டிற்கு @4% மற்றும @8% என்று கணக்கிடப்படும் முதிர்வு மதிப்பானது உத்திரவாதம் அல்ல மற்றும் அது பாலிசிதாரர் தேர்ந்தெடுத்த திட்ட வருமானத்தின் அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச வரையறை கிடையாது மற்றும் திட்டங்களின் செயல்திறன், எதிர்கால முதலீட்டு செயல்திறன் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அமையும்.

## டாப் அப் பிரீமியங்களுக்கான முக்கிய நிபந்தனைகள்

- டாப் அப் பிரீமியங்கள் ரொக்க உத்திரவாதமாக, செலுத்திய டாப் அப் பிரீமியத்தின் 1.25 மடங்காக கொண்டிருக்கும்.
- அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருந்தால், பாலிசியின் கடைசி 5 வருடங்கள் தவிர, ஒப்பந்தம் நடப்பில் இருக்கும் பொழுது எந்நேரத்திலும் டாப் அப் பிரீமியங்கள் அனுமதிக்கப்படுகிறது.
- குழுமம் ஒப்புதல் அளித்த எழுத்துக் காப்புறுதியின் (அன்டர் ரைட்டிங்) வழிகாட்டுதல்களின்படி அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச டாப் அப் பிரீமியமானது ரூ.5,000; அதிகபட்சத்திற்கு வரையறை கிடையாது.
- செலுத்திய டாப் அப் பிரீமியங்கள், டாப் அப் பிரீமியம் செலுத்தும் நாள் வரை செலுத்திய மொத்த ரெகுலர் பிரீமியங்களின் தொகையை மீறக்கூடாது.

- டாப் அப் பிரீமியம் செலுத்தும் சமயத்தில் குறிப்பிட்டு தெரிவித்தால் அன்றி, ரெகுலர் பிரீமியம் ஒதுக்கீடு செய்யப்படும் அதே திட்டத்தில் டாப் அப் பிரீமியங்களும் ஒதுக்கீடு செய்யப்படும்.
- ஒவ்வொரு டாப் அப் பிரீமியங்களுக்கும் முடக்கப்படும் (லாக் இன்) காலம் ஐந்து வருடங்களாக இருக்கும். அப்படிப்பட்ட காலத்தில் பகுதிப் பெறுதல் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த முடக்கப்பட்ட காலமானது கீழ்க்கண்ட நிலைகளில் முடிவுறச் செய்யும் பொழுது பிரயோகிக்கப்பட மாட்டாது:

  - பாலிசியின் முதல் ஐந்து வருடங்களுக்குப் பிறகு முழுமையாகப் பெறுதல் (வித்டிராயல்) / சரண்டர் ஆகியவை கிடைக்கிறது
  - ஆயுள் காப்பீட்டாளரின் மரணம்

## திட்ட விருப்பத் தேர்வுகள்: உங்களது ஆபத்தை ஏற்கும் தன்மையின் அடிப்படையில் 7 திட்ட விருப்பத் தேர்வுகளில் இருந்து நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

| திட்டத்தின் பெயர் மற்றும் நோக்கம் | முதலீட்டு முறை | ஆபத்து விவரங்கள் |
|---|---|---|
| **பேலன்ஸ்டு ஃபன்ட்- II [SFIN: ULIF01508/01/2010LIBALAN-II122]:** மூலதன வளர்ச்சி மற்றும் நிலையான வருமானம் ஆகிய இரண்டிற்குமான சமச்சீரை உருவாக்குகிறது. | டெட் (25%-100%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (0%-45%) | மிதமானது |
| **பான்ட் ஃபன்ட்- II [SFIN: ULIF01608/01/2010LIFDEBT-II122]:** அதிகத் தரம் வாய்ந்த நிலையான வருமானம் அளிக்கும் பத்திரங்களில் முதலீடு செய்வதன் மூலம் நிலையான வருமானத்தை உருவாக்குகிறது | டெட் (60%-100%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (0%) | குறைவானது |
| **என்ஹான்ஸர் ஃபன்ட்- II [SFIN: ULIF01708/01/2010LIFENHN-II122]:** அதிகமாக ஈக்விடியில் முதலீடு செய்து, அதிகமாக மற்றும் நீண்டகால மூலதன வளர்ச்சியை வழங்குகிறது. | டெட் (0%-40%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (60%-100%) | அதிகமானது |
| **குரோத் ஃபன்ட்- II [SFIN: ULIF01808/01/2010LIGROWT-II122]:** அதிகமாக ஈக்விடியில் முதலீடு செய்து, நீண்டகால மூலதன வளர்ச்சியை வழங்குகிறது. | டெட் (0%-50%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (30%-85%) | அதிகமானது |
| **இன்ஃப்ராஸ்டிரக்சர் ஃபன்ட் [SFIN: ULIF01908/01/2010LIFEINFRAF122]:** உள்கட்டமைப்பு சார்ந்த ஈக்விடிகளில் முதலீடு செய்து நிலையான வருமானத்தை வழங்குகிறது. | டெட் (0%-40%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (60%-100%) | அதிகமானது |
| **புரொடெக்டர் ஃபன்ட்- II [SFIN: ULIF02108/01/2010LIPROTE-II122]:** குறைவாக ஈக்விடியில் முதலீடு செய்து நிலையான வருமானத்தை உருவாக்குகிறது. | டெட் (25%-100%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (0%-20%) | குறைவானது |
| **பிஎஸ்யூ ஃபன்ட் [SFIN: ULIF02208/01/2010LIFEPSUFND122]:** பிஎஸ்யூ மற்றும் அவை சார்ந்த ஈக்விடிகளில் முதலீடு செய்வதன் மூலம் நிலையான வருமானத்தை உருவாக்குகிறது | டெட் (0%-40%)<br>ரொக்கச் சந்தை (0%-40%)<br>பங்கு (60%-100%) | |

எம்எம் என்றால் ரொக்கச் சந்தை மற்றும் பிற ரொக்கப் பத்திரங்கள்

## டிஸ்கன்டின்யூட் பாலிசி ஃபன்ட் (தொடராமல் போன பாலிசி ஃபன்ட்)

| திட்டத்தின் பெயர் மற்றும் நோக்கம் | சொத்து ஒதுக்கீடு | ஆபத்து விவரங்கள் |
|---|---|---|
| **டிஸ்கன்டின்யூட் பாலிசி ஃபன்ட் [SFIN: ULIF03127/01/2011LIDISCPLCY122]** IRDA அவ்வப்பொழுது பரிந்துரைக்கும் குறைந்தபட்ச உத்திரவாத விலையில் வழங்குவதாகும். | எம் எம்: 0 முதல் 40% வரை<br>அரசுப் பத்திரங்கள்<br>60% முதல் 100% வரை | குறைவானது |

டிஸ்கன்டின்யூட் பாலிசி ஃபன்ட்டிற்கான தற்பொழுதைய குறைந்தபட்ச உத்திரவாத வட்டி விகிதமானது ஆண்டிற்கு 4% ஆகும்.

எம்எம் என்றால் ரொக்கச் சந்தை மற்றும் பிற ரொக்கப் பத்திரங்கள்

## சிஸ்டமேடிக் டிரான்ஸ்ஃபர் பிளான்: ருபி காஸ்ட் ஆவரேஜிங்கை எடுத்துக் கொள்ள விருப்பத் தேர்வு

தற்பொழுதைய போர்ட்ஃபோலியோ நிர்வாகத்தில், நாங்கள் உஙகள் ரொக்கத்தை டெட் ஃபன்ட் மற்றும் ஈக்விடி ஃபன்ட் ஆகியவற்றின் இடையே, இலவசமாக மாற்றுகிறோம்(சுவிட்ச்), இதன்மூலம் ஈக்விடிகளில் முதலீடு செய்யும் ஒட்டுமொத்த ஆபத்து குறைக்கப்படுகிறது.

- இந்தச் சலுகையானது, குறைந்தபட்சம் 10% பிரீமியங்களை புரொடெக்டர் ஃபன்ட் II வில் முதலீடு செய்தால் மட்டுமே கிடைக்கிறது.
- இந்த அம்சமானது, தேரந்தெடுத்தபடி, வாரம் அல்லது மாதத்தின் அடிப்படையில், பாலிசி காலத்தில், கடைசி 2 வருடங்கள் தவிர கீழ்க்கண்ட முறையில், தானாகவே புரொடெக்டர் ஃபன்ட் II விலிருந்து என்ஹான்ஸர் ஃபன்ட் II க்கு மாற்றப்படுகிறது (சுவிட்ச் செய்யப்படுகிறது)

### வார எஸ்டிபி (STP) இன் பொழுது

| | |
|---|---|
| வாரம் 1 | யூனிட்டுகளின் 1/52 பங்கு வாரம் 1 இன் இறுதியில் கிடைக்கிறது |
| வாரம் 2 | யூனிட்டுகளின் 1/51 பங்கு வாரம் 2 இன் இறுதியில் கிடைக்கிறது |
| வாரம் 26 | யூனிட்டுகளின் 1/27 பங்கு வாரம் 26 இன் இறுதியில் கிடைக்கிறது |
| வாரம் 51 | யூனிட்டுகளின் 1/2 பங்கு வாரம் 51 இன் இறுதியில் கிடைக்கிறது |
| வாரம் 52 | மீதம் உள்ள யூனிட்டுகள் 52 வது வாரம் இறுதியில் கிடைக்கிறது |

### மாத எஸ்டிபி (STP) இன் பொழுது

| | |
|---|---|
| மாதம் 1 | யூனிட்டுகளின் 1/2 பங்கு மாதம் 1 இன் இறுதியில் கிடைக்கிறது |
| மாதம் 2 | யூனிட்டுகளின் 1/11 பங்கு மாதம் 2 இன் இறுதியில் கிடைக்கிறது |
| மாதம் 6 | யூனிட்டுகளின் 1/7 பங்கு மாதம் 6 இன் இறுதியில் கிடைக்கிறது |
| மாதம் 11 | யூனிட்டுகளின் 1/2 பங்கு மாதம் 11 இன் இறுதியில் கிடைக்கிறது |
| மாதம் 12 | மீதம் உள்ள யூனிட்டுகள் 12 வது மாதம் இறுதியில் கிடைக்கிறது |

### தலைகீழ் எஸ்டிபி (STP)

கிடைசி 2 வருடங்களின் பொழுது (அதாவது முதிர்வுக்கு கடைசி 24 மாதஙகளுக்கு முன்), இந்த நிதிகள் என்ஹான்சர் ஃபன்ட்-II இலிருந்து புரொடெக்டர் ஃபன்ட்-II விற்கு கீழ்க்கண்ட முறையில் மாற்றப்படும்.

| | |
|---|---|
| மாதம் 1 | 24வது மாதத்தின் துவக்கத்தில் 1/24 யூனிட்டுகள் கிடைக்கிறது |
| மாதம் 2 | முதிர்வுக்கு முன்னால், 23வது மாதத்தின் துவக்கத்தில் 1/23 யூனிட்டுகள் கிடைக்கிறது |
| மாதம் 12 | 12வது மாதத்தின் துவக்கத்தில் 1/13 யூனிட்டுகள் கிடைக்கிறது |
| மாதம் 23 | முதிர்வுக்கு முன்னால், 2வது மாதத்தின் துவக்கத்தில் 1/2 யூனிட்டுகள் கிடைக்கிறது |
| மாதம் 24 | மீதம் உள்ள யூனிட்டுகள் கடைசி மாத துவக்கத்தில் கிடைக்கிறது |

- புரொடெக்டர் ஃபன்ட்-II விலிருந்து என்ஹான்சர் ஃபன்ட்-II விற்கு மாற்றம் செய்யும் காலத்தின் பொழுது, புரொடெக்டர் ஃபன்டிலிருந்து வேறு ஃபன்ட் அல்லது வேறு ஃபன்டிலிருந்து புரொடெக்டர் ஃபன்டிற்கு மாற்ற அனுமதி கிடையாது. அதேபோல, என்ஹான்சர் ஃபன்ட்-II விலிருந்து புரொடெக்டர் ஃபன்டிற்கு மாற்றம் செய்யும் காலத்தின் பொழுது, என்ஹான்சர் ஃபன்ட்-II விலிருந்து வேறு ஃபன்ட் அல்லது வேறு ஃபன்டிலிருந்து என்ஹான்சர் ஃபன்ட்-II விற்கு மாற்ற அனுமதி கிடையாது.
- STP இன் கீழ் செய்யப்படும் அனைத்து மாற்றுதல்களும் இலவசமாக செய்யப்படும் மற்றும் அது குறைந்தபட்ச மாற்றுத் தெகை மற்றும் மாற்றிய பிறகான குறைந்தபட்சத் தொகை என எந்த விதமான கட்டுப்பாடுகளும் கிடையாது.
- பாலிசி வருடாந்திரத்திற்கு 30 நாட்கள் முன்னர் எழுத்து மூலம் நோட்டீஸ் அளித்து, எஸ்டிபியை, பாலிசியின் கடைசி மூன்று வருடங்கள் தவிர துவக்கத்திலோ அல்லது எந்த பாலிசி வருடாந்திரத்திலும் ஆரம்பிக்கமுடியும்.
- பாலிசி வருடாந்திரத்திற்கு 30 நாட்கள் முன்னர் எழுத்து மூலம் நோட்டீஸ் அளித்து, எஸ்டிபியை, எந்த பாலிசி வருடாந்திரத்திலும் நிறுத்திக் கொள்ள முடியும். இந்த விருப்பத் தேர்வை பின்னர் மீண்டும் துவக்கிக் கொள்ள முடியும்.
- முதலீட்டு ஆபத்துக்கள் தொடர்ந்து பாலிசிதாரரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## மாற்றுக்கள்: உங்கள் நிதிகளை கட்டணம் இல்லாமல், இலவசமாக நிர்வகிப்பதன் நன்மைகள்

**சந்தை வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு திட்டங்களின் இடையே மாற்று செய்வதற்கான 12 பொன்னான வாய்ப்புகள்.**

- சேர்ந்திருக்கும் தொகையை, இந்தத் திட்டத்தில் கிடைக்கக்கூடிய 7 நிதிகளின் இடையே மாற்றிக் கொள்ளலாம்.
- மாறிவரும் ஆபத்தை ஏற்கக்கூடிய தன்மை அல்லது மாறிவரும் சந்தை நிலைக்கு ஏற்ப ஒரு நிதியில் இருந்து மற்றொரு நிதிக்கு யூனிட்டுகளை அட்ஜஸ்ட் அல்லது நகர்த்துவதற்கு மாற்று (சுவிட்ச்) என்பது ஒரு வாய்ப்பாகும்.
- ஒரு பாலிசி வருடத்திற்குள் செய்யப்படும் முதல் 12 யூனிட் மாற்றுக்களுக்கு கட்டணம் கிடையாது. உபயோகப்படுத்தாத மாற்றுக்களை வரும் வருடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாது.
- பின்னர் செய்யப்படும் மாற்றுக்களுக்கு மாற்று செய்யப்படும் தொகையில் @0.50% என கட்டணம் விதிக்கப்படும், இது ஒரு பரிவர்த்தனைக்கு குறைந்தபட்சம் ரூ.25 எனவும் மற்றும் ரூ.500ஐ மீறாமலும் இருத்தல் வேண்டும். இந்தக் கட்டணம் எந்த நிதியில் யூனிட் மாற்று செய்யப்பட்டதோ அதில் இருந்து கழிக்கப்படும்.

## பிரீமியத்தை திசை திருப்புதல்:
## உங்கள் எதிர்காலப் பிரீமியங்களின் முதலீட்டு முறையை மாற்றிக் கொள்வதற்கான சுதந்திரம்

**சந்தை நகர்வை சிறப்பாக உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்**

- பாலிசியின் கீழ் உள்ள பல்வேறு நிதிகளுக்கு உங்கள் எதிர்காலப் பிரீமியங்களின் ஒதுக்கீட்டை மாற்றி அமைத்துக் கொள்ள அனுமதிக்கிறது.
- இந்தக் கோரலை ஒப்புக் கொண்டபின், முன்னர் உள்ள ஒதுக்கீடு முறை பயனற்றுப் போகும்.
- இந்த வசதி இலவசம் ஆகும்.

## பகுதியாகப் பெறுதல் (பார்ஷியல் வித்டிராயல்):
## எதிர்பாராத நிதித் தேவைகளை சமாளிக்க உங்கள் ரொக்கத்தை அணுகுங்கள்.

**உங்கள் நிதியில் இருந்து ரொக்கத்தைப் பகுதியாகப் பெறுவதை அனுமதிப்பதன் மூலம் ரொக்கப் புழக்கத்தின் கவலைகளை (லிக்விடிடி) நிவர்த்தி செய்கிறது**

திரு. அரிஜித் டிரேஹன், பகுதிப் பெறுதல் விருப்பத் தேர்வை உபயோகப்படுத்தி, பாலிசி காலத்தின் பொழுது இரண்டு முறை அவருடைய பெற்றோரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு நிதி அளித்துள்ளார்.




- ஆயுள் காப்பீட்டாளர், கடைசி பிறந்தநாளின்படி 18 வருடங்களை அடைந்தபின்னர், ஒரு பாலிசி வருடத்தில் 4 முறை அனமதிக்கப்படும், உபயோகப்படுத்தாத மாற்றுக்களை வரும் வருடங்களுக்கு எடுத்துச் செல்ல முடியாது.
- முதல் ஐந்து பாலிசி வருடங்களை பூர்த்தி செய்தபின், ரெகுலர் பிரீமியம் சம்மந்தப்பட்ட நிதி மதிப்பில் இருந்து அனுமதிக்கப்படும்.
- டாப் அப் பரீமியங்களுக்கான நிதி மதிப்பில் இருந்து பெறுதலை (வித்டிராயல்) ஒவ்வொரு டாப் அப் பிரீமியம் செலுத்திய நாளில் இருந்து 5 வருடங்கள் கழித்து அனுமதிக்கப்படும்.
- பகுதிப் பெறுதலானது, டாப் அப் பிரீமியத்திற்கான நிதி மதிப்பில், ஏதாவது இருந்தால், இருந்து முதலில் செய்யப்படும் மற்றும் பிறகு ரெகுலர் பிரீமிய நிதி மதிப்பில் இருந்து செய்யப்படும்.
- குறைந்தபட்ச பகுதிப் பெறுதல் தொகையானது ரூ.5000 ஆகும்.


- பெறுதலுக்குப் பிறகான ரெகுலர் பிரீமிய யூனிட்டுகளின் நிதி மதிப்பு முதல் வருடத்தின் வருடாந்திரப் பிரீமியத்தின் 2 மடங்கிற்குக் கீழே குறையக் கூடாது. இந்தக் குறைந்தபட்ச தொகைக்கான நிபந்தனைகள், டாப் அப் பிரீமியங்களின் நிதி மதிப்பில் இருந்து பெறப்படும் பெறுதல்களில் பிரயோகிக்கப்பட மாட்டாது.
- மரண காலத்தின் பொழுது, அடிப்படை ரொக்க உத்திரவாதத்தில், கடைசி 2 வருடங்களில் செய்த பகுதிப் பெறுதல்கள / சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையை கழித்துக் கொண்டு, வழங்க வேண்டிய மரண அனுகூலம் கணக்கிடப்படுகிறது. டாப் அப் பிரீமியத்தில் இருந்து செய்யப்படும் பகுதிப் பெறுதல்கள் இந்த நோக்கத்திற்காக கழித்துக் கொள்ளப்பட மாட்டாது.

## சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல்:
## தொடர்ச்சியாக வரும் செலவுகளை சமாளித்திட உங்களுக்கு நன்மை கிடைக்கிறது.

**ஒரு முறை எழுத்து மூலம் கோரிக்கை அளித்து கட்டமைக்கப்பட்ட பெறுதல் மூலம் உங்கள் திட்டமிடப்பட்ட தேவைகளுக்கு நிதி அளித்திடுங்கள்**

திரு. அரிஜித் டிரேஹன் அவர்கள் அவரது குழந்தையின் மேம்படுத்தப்பட்ட கல்வித் தேவைகள் அதாவது பயிற்சிகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்தல் ஆகியவற்றிற்கு சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதலை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

**5 வருடங்களுக்கான சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல்**




- கோரிக்கை வைக்கப்படும் சமயத்தில், நிதி மதிப்பு ரூ.5,00,000 அல்லது அதற்கு மேல் இருப்பதற்கு உட்பட்டு, முதல் ஐந்து பாலிசி வருடங்கள் பூர்த்தியான பிறகு, கடைசி 3 பாலிசி வருடங்கள் தவிர, பாலிசி காலத்தின் பொழுது, முதிர்விற்கு முன்னர் எந்நேரத்திலும் அனுமதிக்கப்படும்.
- வழங்கப்படும் காலமானது (பே அவுட்) எந்த முழு எண்ணாகவும் அதாவது, 3 முதல் மீதமுள்ள பாலிசி கால எண்ணிக்கையாக எதுவும் இருக்கலாம்.
- சிஸ்டமேடிக் பெறுதலின் வழங்குதலை ஆண்டிற்கு, அரையாண்டிற்கு, காலாண்டிற்கு அல்லது மாத வீதமாக தேர்வு செய்து கொள்ள முடியும்.
- எந்த மாதத்தில் இருந்து பெறுதல் தேவையோ அந்த மாதத்திற்கு 15 நாட்கள் முன்னர் ஒரு கோரிக்கை பெறப்பட வேண்டும்.
- வருடத்திறகு நிதி மதிப்பில் இருந்து 3% மற்றும் 12% ஆகியவற்றின் இடையே பெறுதல் அனுமதிக்கப்படும். ஒரு வேளை பெறுதலானது அடிக்கடி இருந்தால், அதிகபட்சத் தொகையானது விகிதாச்சாரப்படிகுறையும்.
- பெறுதல் துவங்கும் பொழுது, குறைந்தபட்ச பெறுதல் கோரிக்கை ரூ.15,000 ஆக இருத்தல் வேண்டும்.
- நேரடியாக வங்கியில் செலுத்துதல் (டைரக்ட் கிரெடிட்) / ஈசிஎஸ் ஆகியவை அனைத்து வழங்குதல் வீதத்திற்கும் கிடைக்கிறது. காசோலை மூலமாக மூலமாக வழங்குதல் (பே அவுட்) ஆண்டு மற்றும் அரையாண்டு வீதத்தில் மட்டுமே கிடைக்கிறது.
- அனைத்து வழங்கதல்களும் அரியர்ஸில் செய்யப்பட வேண்டும்
- ஒரு வேளை எந்த சமயத்திலாவது, வழங்குதல் காலத்தில், நிதி மதிப்பு முதல் வருட வருடாந்திரப் பிரீமியத்தின் 2 மடங்கிற்குக் கீழே வரும்பொழுது, பிறகு சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல் நிறுத்தப்படும் மற்றும் பாலிசியானது நிலையான விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி தொடரும்.
- மரண காலத்தின் பொழுது, அடிப்படை ரொக்க உத்திரவாதத்தில், கடைசி 2 வருடங்களில் செய்த பகுதிப் பெறுதல்கள / சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையை கழித்துக் கொண்டு, வழங்க வேண்டிய மரண அனுகூலம் கணக்கிடப்படுகிறது. டாப் அப் பிரீமியத்தில் இருந்து செய்யப்படும் பகுதிப் பெறுதல்கள் இந்த நோக்கத்திற்காக கழித்துக் கொள்ளப்பட மாட்டாது.
- மேற்கூறிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு பாலிசி காலத்தின் பொழுது எந்நேரத்திலும் இந்த விருப்பத் தேர்வை நிறுத்தி மற்றும் மீண்டும் துவங்குவதற்கு அனுமதிக்கப்படும்.

## திட்ட நன்மைகள்

### மரண அனுகூலம்: உங்கள் குடும்பத்திற்கான உங்கள் அர்ப்பணிப்பு மிக முக்கியமானது

- ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் எதிர்பாராத விதமாக மரணம் அடையும் பொழுது, ரொக்க உத்திரவாதம் அல்லது ரெகுலர் / வரையறை உள்ள பிரீமியங்கள் சம்மந்தப்பட்ட நிதி மதிப்பு அல்லது செலுத்திய ரெகுலர் பிரீமியங்களின் 105% ஆகிய மூன்றின் அதிகமானது கூடுதலாக வழங்கப்படுகிறது.
- பாலிசியில் டாப் அப் பிரீமியங்கள் செலுத்தி இருந்தால், டாப் அப் ரொக்க உத்திரவாதம் அல்ல்து டாப் அப் பிரீமிய நிதி மதிப்பு அல்லது செலுத்திய டாப் அப் பிரீமியங்களின் 105% ஆகிய மூன்றின் அதிகமானது கூடுதாக வழங்கப்படுகிறது.
- பாலிசி காலத்திற்குள் 8 முதல் 70 வரையின் இடையில் உள்ள வயதினர் ஒரு வேளை விபத்தின் மூலம் மரணம் அடைய நேரிட்டால், விபத்தின் மூலம் ஏற்படும் மரண அனுகூலத்திற்கான ஒரு கூடுதல் தொகை வழங்கப்படுகிறது. விபத்தின் மூலம் ஏற்படும் மரண ரொக்க உத்திரவாதத் தொகை பாலிசி அட்டவணையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

**தயவு செய்து குறித்துக் கொள்ளவும்:**

மரண காலத்தின் பொழுது, அடிப்படை ரொக்க உத்திரவாதத்தில், கடைசி 2 வருடங்களில் செய்த பகுதிப் பெறுதல்கள / சிஸ்டமேடிக் பகுதிப் பெறுதல்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையை கழித்துக் கொண்டு, வழங்க வேண்டிய மரண அனுகூலம் கணக்கிடப்படுகிறது. டாப் அப் பிரீமியத்தில் இருந்து செய்யப்படும் பகுதிப் பெறுதல்கள் இந்த நோக்கத்திற்காக கழித்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஒரு வேளை பாலிசியானது, தொடரா பாலிசி நிதிக்கு (டிஸ்கன்டின்யூட் பாலிசி ஃபன்ட்) மாற்றப்படும் பொழுது மற்றும் அதன் பிறகு ஆயுள் காப்பீட்டாளர் மரணம் அடைய நேர்ந்தால், பிறகு, தொடரா பாலிசியில் உள்ள தொகை நாமினிக்கு வழங்கப்படும்.

### முதிர்வு நன்மை: உங்கள் கடமைகளை பூர்த்தி செய்வதற்கான வெகுமதிகளை அனுபவியுங்கள்

- முதிர்வு நாள் வரை உயிர்வாழும் பொழுது, ரெகுலர் பிரீமியங்கள், டாப் அப் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால், அவை சம்மந்தப்பட்ட நிதி மதிப்பு மற்றும் முதிர்வில் பூஸ்டர் சேர்ப்புகள் ஆகியவற்றைப் பெறுங்கள்.
- முதிர்வு பூஸ்டர் சேர்ப்பானது, கீழ்க்கண்ட அட்டவணையில் அளித்துள்ளபடி, முதிர்வில் உள்ள ரெகுலர் பிரீமியங்களின் நிதி மதிப்பின் ஒரு விழுக்காடாக கணக்கிடப்படுகிறது.

| பாலிசியில் பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்களில்) | வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியம் ஆகியவற்றின் நிதி மதிப்பில் ஒரு % ஆக முதிர்வில் பூஸ்டர் சேர்ப்புகள் இருக்கும் |
|---|---|
| 7 | 0.65% |
| 10 | 0.70% |
| 15 | 0.75% |
| 16 - 30 | 0.80% |

- பெய்ட் அப் பாலிசிகளையும் சேர்த்து முதிர்வை அடையும் அனைத்து பாலிசிகளுக்கும் முதிர்வில் பூஸ்டர் சேர்ப்புகள் வழங்கப்படும்.

### மைல்கல் பூஸ்டர்களின் அதிகரிப்பு (IMB): முதலீடு செய்து கொண்டு இருத்தல் வெகுமதி அளிக்கிறது

IMB ஒதுக்கீட்டிற்காக பாலிசி வருடாந்திர நாள் வரை தொடர்புடைய அனைத்து உரிய பிரீமியங்களையும் தொடர்ந்து செலுத்தி பாலிசியை தொடர்ச்சியாக வைத்திருந்தால், இந்தத் திட்டம் வழங்குகிறது "இன்கிரீஸிங் மைல்ஸ்டோன் பூஸ்டர்ஸ்சு (IMB): (மைல்கல் பூஸ்டர்களின் அதிகரிப்பு). IMB சேர்ப்புகள், ரெகுலர் பிரீமியங்கள் சம்மந்தப்பட்ட நிதி மதிப்பின் ஒரு விழுக்காடாகும் மற்றும் அவை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிதி மதிப்பில் சேர்க்கப்படுகிறது.

- IMB ஒதுக்கீட்டிற்காக, ஆயுள் காப்பீட்டாளர் தொடர்புடைய வருடாந்திர நாள் வரை உயிர் வாழ்ந்திருத்தல் வேண்டும்
- பாலிசி வருடாந்திரம் முதிர்வு நாளோடு ஒத்துப் போகும் பொழுது IMB பொருந்தாது.

- டாப் அப் பிரீமியங்கள், ஏதாவது இருப்பின், அது சம்பந்தப்பட்ட நிதி மதிப்பில் IMB சேர்ப்புகள் பொருந்தாது.
- IMB ஆனது கீழக்கண்ட அட்டவணையின்படி அமையும்

| யூனிட் ஃபண்டில் ஒதுக்கீடு செய்யப்படும் நாள் | வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியம் சம்பந்தப்பட்ட நிதி மதிப்பு வயதின் ஒரு % ஆக IMB |
|---|---|
| 10வது பாலிசி வருடாந்திரத்தின் பொழுது | 0.50% |
| 15வது பாலிசி வருடாந்திரத்தின் பொழுது | 0.55% |
| 20வது பாலிசி வருடாந்திரத்தின் பொழுது | 0.60% |
| 25வது பாலிசி வருடாந்திரத்தின் பொழுது | 0.65% |

- மேலே உள்ள அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ள IMB விழுக்காடானது உத்திரவாமானது மற்றும் மாற்ற முடியாதது.
- IMB ஆனது பாலிசி வருடாந்திரத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் அதாவது உடனடியாக கடந்த பாலிசி வருடத்தின் இறுதியில் இருந்த நிதி மதிப்பின் அடிப்படையில் அந்தந்த பாலிசி வருடத்தின் ஆரம்பத்தில் செய்யப்படும்.

மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 10வது பாலிசி வருடாந்திரம் என்பது பூர்த்தியான 10வது பாலிசி வருடம் என்பதை தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள். அது போன்று, 15வது, 20வது மற்றும் 25வது பாலிசி வருடம் என்பது முறையே பூர்த்தியான 15வது, 30வது மற்றும் 25வது பாலிசி வரும் ஆகும்.

## வரி நன்மைகள்

- வருமான வரிச் சட்டம், 1961, அதில் உள்ள பல்வேறு ஷரத்துக்கள் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு உட்பட்டு, திட்டமானது கழிப்புக்கள் மற்றும் பிற நன்மைகளுக்குத் தகுதி பெறுகிறது. மேலும் விவரங்களுக்கு தயவு செய்து உங்கள் வரி ஆலோசகரை கலந்து ஆலோசிக்கவும். வரிச்சட்டங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.

## கட்டணங்கள்

### பிரீமிய ஒதுக்கீடு கட்டணம்

- இந்தக் கட்டணமானது செலுத்தப்பட்ட பிரீமியத்தில் இருந்து கழித்துக் கொள்ளப்படும் மற்றும் இந்தக் கட்டணம் கழித்துக் கொண்ட பிறகு மீதம் உள்ள தொகை முதலீடு செய்யப்படும். இந்தக் கட்டணமானது எந்த வருடத்திற்காக பிரீமியம் செலுத்தப்பட்டதோ அதன் அடிப்படையில் அமையும்.

| பாலிசி வருடம் | பிரீமிய ஒதுக்கீடு கட்டணம் | |
|---|---|---|
| | வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியம் | டாப் அப் பிரீமியம் |
| 1st | 9% | 2% |
| 2nd | 7% | |
| 3 முதல் 10 வரை | 6% | |
| 11 வது முதல் | 2% | |

### நிதி மேலாண்மைக் கட்டணம்

நிதி மேலாண்மைக் கட்டணம் (FMC), தினமும் என்ஏவி (NAV) கணக்கிடும் பொழுது, அனைத்து நிதிகிளிலும் பிரயோகிக்கப்படும்.

- FMC ஆனது, தொடரா பாலிசி நிதி தவிர அனைத்து நிதிகளுக்கும் ஆண்டிற்கு 1.35% ஆகும்.
- FMC ஆனது, தொடரா பாலிசி நிதிக்கு ஆண்டிற்கு 0.50% ஆகும்.

### பாலிசி நிர்வாகக் கட்டணம்

- இந்தக் கட்டணமானது, பாலிசி யூனிட் கணக்கில் இருந்து மாதாமாதம் ரிடம்ஷன் செய்து விதிக்கப்படும்.
- பாலிசி நிர்வாகக் கட்டணமானது, கீழ்க்கண்ட அட்டவணையில் அளித்துள்ளபடி, பாலிசி காலம் முழுவதும் பிரயோகிக்கப்படும்

| பாலிசி வருடம் | பாலிசி நிர்வாகக் கட்டணம் (மாதாமாதம்) |
|---|---|
| 1st | ஏதுவும் இல்லை |
| 2 முதல் 5 வரை | வருடாந்திரப் பிரீமியத்தின் 0.02% |
| 6th | வருடாந்திரப் பிரீமியத்தின் 0.20% |

- பாலிசி நிர்வாகக் கட்டணம், மாதத்திற்கு, வருடாந்திரப் பிரீமியத்தின் 0.20% ஆகும், இது 7வது பாலிசி வருடம் முதல், ஒவ்வொரு பாலிசி வருடாந்திரத்திலும் 2.50% என அதிகரிக்கப்படும்.
- இந்தக் கட்டணம் மாதம் ரூ.500ஐ மீறக்கூடாது.

## இறப்புக் கட்டணம்

- இறப்புக கட்டணம் காப்பீட்டுத் தொகையில் (சம் அட் ரிஸ்க்) பிரயோகிக்கப்படுகிறது, இது வழங்கப்படும் மரண அனுகூலத் தொகையில் இருந்து இந்தக் கட்டணம் கழிக்கப்படும் நாளில் நிதி மதிப்பை கழித்து வருவதன் வித்தியாசத்திற்கு இடையே இருப்பதாகும், இவை தனித்தனியே அடிப்படை மற்றும் டாப் அப்பிற்கு என இருக்கும்.
- இந்தக் கட்டணம், பாலிசி யூனிட் கணக்கில் இருந்து மாதாமாதம் ரிடம்ஷன் செய்து கழித்துக் கொள்ளப்படும்
- ஒரு நல்ல உடற்தகுதி கொண்டவருக்கான ஒரு ஆயிரம் ரொக்க உத்திரவாதத்திற்கான மாதிரி வருட கட்டணங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

| வயது | 25 | 30 | 35 | 40 |
|---|---|---|---|---|
| ஆண் | 0.7774 | 0.8158 | 1.0037 | 1.4028 |
| பெண் | 0.7816 | 0.7866 | 0.9068 | 1.2133 |

- மேலே அளிக்கப்பட்டுள்ள இறப்புக் கட்டணத்திற்கு மேலாக, ரூ.0.60 என ஒரு 1000 விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கான ரொக்க உத்திரவாதத்திற்காக, உள்ளடக்கிய விபத்தினால் ஏற்படும் மரண அனுகூலத்திற்காக, ஒரு வேளை பொருத்தமானதாக இருந்தால், விதிக்கப்படும்.

## தொடராக் கட்டணம்

- ஒரு வேளை பாலிசி, முதல் 5 வருடங்களுக்குள் தொடராமல் போகும் பொழுது, இந்தக் கட்டணம் பாலிசி யூனிட் கணக்கில் இருந்து கழித்துக் கொள்ளப்படும்:

| பாலிசி வருடத்திற்குள் பாலிசி தொடராமல் போகும் பொழுது | தொடராக் கட்டணம் |
|---|---|
| 1st | (AP அல்லது நிதி மதிப்பு) ஆகிய இரண்டில் குறைவானதில் 6%, அதிகபட்சம் ₹6,000 க்கு உட்பட்டு |
| 2nd | (AP அல்லது நிதி மதிப்பு) ஆகிய இரண்டில் குறைவானதில் 4%, அதிகபட்சம் ₹5,000 க்கு உட்பட்டு |
| 3rd | (AP அல்லது நிதி மதிப்பு) ஆகிய இரண்டில் குறைவானதில் 3%, அதிகபட்சம் ₹4,000 க்கு உட்பட்டு |
| 4th | (AP அல்லது நிதி மதிப்பு) ஆகிய இரண்டில் குறைவானதில் 2%, அதிகபட்சம் ₹2,000 க்கு உட்பட்டு |
| 5 வது மற்றும் அதற்கு மேல் | ஏதுவும் இல்லை |

* AP: வருடாந்திரப் பிரீமியம்
டாப் அப் பிரீமியம், ஏதாவது இருந்தால், அவை சம்மந்தப்பட்ட நிதி மதிப்பிற்கு தொடராக் கட்டணம் எதுவும் கிடையாது.

தொடரா பாலிசிக்கான நிதி மேலாண்மைக் கட்டணம், IRDA அவ்வப்பொழுது வழங்கும் வழிகாட்டுதல்களின்படி மாற்றத்திற்கு உட்பட்டது. தொடரா பாலிச நிதிக்கான தற்பொழுதைய குறைந்தபட்ச உத்திரவாத வட்டி விலை வருடத்திற்கு 4% ஆகும்.

## மாற்றுக் (சுவிட்சிங்) கட்டணம்

ஒரு பாலிசி வருடத்தில் முதல் 12 மாற்றுக்களுக்கு கட்டணம் எதுவும் இல்லை; பின்னர் செய்யப்படும் மாற்றுக்களுக்கு, மாற்றுத் தொகையில் 0.50% என விதிக்கப்படும், இது ஒரு மாற்றுக்கு, குறைந்தபட்சம் ரூ.25 எனவும் மற்றும் அதிகபட்ச் ரூ.500 எனவும் இருக்கும்.

## வரிகள்

வரிகள், பின்வருவனவற்றை சேர்த்து மற்றும் அதனுடன் வரையறுக்காமல், சரக்கு & சேவை வரி, பொருந்தத் தக்க செஸ்கள் ஆகியவை அரசாங்கம் வெளியிட்டபடி விதிக்கப்படும். வரிச் சட்டங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது. பாலிசி நிர்வாகக் கட்டணம், இறப்புக் கட்டணம், பிரீமிய ஒதுக்கீடுக் கட்டணம், மாற்றுக் கட்டணம் மற்றும் தொடராக கட்டணம் ஆகியவை ஒப்பந்தத்தின் கீழ் உத்திரவாதம் அளிப்பவை ஆகும்.

## நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விதிகள்

### 1. முடக்கப்பட்ட காலம் (லாக் இன்)

முடக்கப்பட்ட காலம் என்றால், பாலிசி துவங்கிய நாள் முதல், தொடர்ச்சியான ஐந்து பூர்த்தியான வருடங்கள் ஆகும், இந்தக் காலத்தின் பொழுது, தொடரா பாலிசியின் தொகையானது, ஆயுள் காப்பீட்டாளரின் மரண நிகழ்வு தவிர, பாலிசிதாரருக்கோ அல்லது ஆயுள் காப்பீட்டாளருக்கோ, அந்தந்த நிகழ்வின்படி, நிறுவனத்தால் வழங்கப்பட மாட்டாது.

### 2. இளைய (மைனர்) ஆயுளுக்கான காப்பீடு

துவங்கும் நாளில், ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் இளையவராக இருந்தால், பிறகு

- ஆயுள் காப்பீட்டாளரின் சார்பாக பாலிசிதாரர் பரீமியத்தை செலுத்தலாம், அவர் பெற்றோர், பாட்டி, தாத்தா அல்லது சட்டபூர்வ பாதுகாவலர் ஆகிய யாராவது ஒருவர் இருக்கலாம். பிரீமியம் செலுத்தும் காலம் முடியும் முன்னர் ஒரு வேளை பாலிசிதாரர் இறக்க நேரிடும் பொழுது, எதிர்காலப் பிரீமியத்தை, ஆயுள் காப்பீட்டாளரின் உயிர் வாழும் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் செலுத்த முடியும் மற்றும் எதிர்காலப் பரீமியம் செலுத்தவில்லை என்றால், தொடரா ஷரத்துக்கள் பிரயோகிக்கப்படும்.
- ஆயுள் காப்பீடாளர் இளையவராக இருக்கும் பொழுது, ஒரு வேளை பாலிசிதாரர் மரணமுற நேர்ந்தால், நிறுவனம் கோரியபடி, தேவைப்படும் விண்ணப்பப் படிவம் மற்றும் ஆதார ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் பெயரில், பாலிசியானது ஆயுள் காப்பீட்டாளரின் உயிர்வாழ் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் பெயரில் வழங்கப்படும்.
- ஆயுள் காப்பீட்டாளர் அவரது 18வது வயதை பூர்த்தி செய்த உடன் பாலிசியானது தானாகவே அவரது பெயருக்கு மாற்றப்படும்.
- பாலிசி துவங்கிய நாளில் இருந்து உடனடியாக காப்பீடு துவங்குகிறது.

### 3. இலவச பார்வைக் காலம் (ஃப்ரீ லுக் பீரியட்):

பாலிசி ஆவணம் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் (ஒரு வேளை பாலிசி தொலைதூர விற்பனை மூலம் கோரப்பட்டிருந்தால் 30 நாட்கள்) விதிகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்யும் உரிமை பாலிசிதாரரருக்கு உள்ளது. ஒரு வேளை பாலிசிதாரர் ஏதாவது விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஒப்புக் கொள்ளவில்லை என்றால், அவர் நிறுவனத்திற்கு எழுத்து மூலம் ஆட்சேபனைக்கன காரணங்களை தெரிவித்து, பாலிசியை நிறுவனத்திற்கு திரும்ப அனுப்பலாம்.

ரத்து செய்யும் நாளில் உள்ள நிதி மதிப்பு மற்றும் ஒதுக்கீடு செய்திறாத பிரீமியம் (ஒதுக்கீடு கட்டணங்கள்) மற்றும் யூனிட்டுகளை ரத்து செய்து கழித்துக் கொள்ளப்பட்ட வேறு கட்டணத் தொகை ஆகியவற்றில் காப்பீடு காலத்திற்கான விகிதாச்சார ஆபத்துக் கட்டணம் மற்றும் மருத்துவ பரிசோதனைக்கான செலவு, ஏதாவது இருந்தால் மற்றும் முத்திரைத்தாள் செலவுகள் ஆகியவற்றைக் கழித்துக் கொண்டு வரும் தொகையை பெற பாலிசிதாரர் தகுதி பெறுகிறார்.

பாலிசி விதிகள் & நிபந்தனைகள் ஆகியவை எங்கள் இணைய தளத்தில் கிடைக்கிறது www.avivaindia.com

### 4. கருணைக் காலம் (கிரேஸ் பீரியட்)

இது பிரீமியத்தை செலுத்துவதற்கு உரிய நாளில் இருந்து கூடுதல் காலத்திற்குள், எந்தவித அபராதம் அல்லது தாமதக் கட்டணம் ஆகியவை இன்றி செலுத்துவதற்கு நிறுவனம் அளிக்கும் காலம் ஆகும், இந்த காலத்தில், எந்தவித தடங்கலும் இன்றி, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீடு பாதுகாப்புடன் பாலிசி நடைமுறையில் உள்ளது போல் கருதப்படும். பிரீமியம் செலுத்துவதற்கான இந்தக் கருணைக் காலமானது 30 நாட்கள் ஆகும்.

### 5. பாலிசி தொடராமை

“தொடராமை” என்றால் கருணைக் காலம் முடிவடைவதற்கு முன் ஒப்பந்தத்தின் உரிய பிரீமியத்தை செலுத்தாமல் பாலிசியை சரண்டர் செய்யும் பொழுது உண்டாகும் நிலையாகும்.

“தொடரா பாலிசி நிதி” என்றால், நடப்பில் இருக்கும் ஒழுங்கு முறைகளின்படி நிறுவனத்தின் தனியாகப் பிரிக்கப்பட்ட நிதி அது ஒதுக்கப்பட்டு மற்றும் முடக்கப்பட்ட காலத்தில், அனைத்து தொடராமல் போன பாலிசிகளின் நிதி மதிப்பால் அமைக்கப்பட்டது. தொடராமல் போன பாலிசி நிதியின் முதலீட்டு அமைப்பானது இந்த ஆவணத்தின் முதலீட்டு விருப்பத் தேர்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''தொடரா பாலசியின் வருமானம்'' என்றால் பொருந்தத்தக்க வட்டி விலையில், கூட்டு வட்டியை சேர்த்த பிறகு பாலிசி தொடராமல் போன நாளில் உள்ள நிதி மதிப்பு,

## A. முடக்கப்பட்ட (லாக் இன்) கால்த்திற்குள் பாலிசி தொடராமை

ஒரு வேளை கருணைக் காலம் முடிவடைவதற்குள் வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியத்தை நாங்கள் முழுமையாகப் பெறாவிட்டால், மேலும் அப்படிப்பட்ட முறை தவறுதல் முடக்கப்பட்ட காலத்திற்குள் நிகழுமானால், தொடராக் கட்டணத்தைக் கழித்த பின் உள்ள நிதி மதிப்பை தொடரா பாலிசி நிதியில் நாங்கள் கிரெடிட் செய்வோம் மற்றும் காப்பீடு பாதுகாப்பு மற்றும் ரைடர் பாதுகாப்பு, ஏதாவது இருந்தால் அவை முடிவிற்கு வரும். அது போன்று தொடராமல் போகும் பொழுது, உங்கள் பாலிசியின் நிலையை செலுத்தாத முதல் வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் தெரியப்படுத்துவோம் மற்றும் புதுப்பித்தல் காலமான மூன்று வருடங்களுக்குள் பாலிசியை புதுப்பித்துக் கொள்ள உங்களுக்கு ஒரு வாய்ப்பும் அளிப்போம்.

உங்கள் பாலிசியை நீங்கள் புதுப்பித்துக் கொள்ள* தேர்வு செய்து ஆனால் புதுப்பித்தல் காலத்தில் செய்ய முடியாவிட்டால், இந்த தொடரா பாலிசி நிதியின் தொகையானது புதுப்பித்தல் காலம் அல்லது முடக்கப்பட்ட காலம், எது பின்னர் நிகழ்கிறதோ அதன் இறுதியில் உங்களுக்கு வழங்கப்படும். புதுப்பித்தல் காலம், முடக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு இருக்குமானால், உங்கள் பாலிசியானது புதுப்பித்தல் காலத்தின் இறுதி வரை தொடரா பாலிசி நிதியிலேயே இருக்கும். இந்தக் காலத்தின் பொழுது தொடரா பாலிசி நிதி மேலாண்மைக் கட்டணம் மட்டுமே விதிக்கப்படும் மற்றும் வேறு எந்தக் கட்டணங்களும் விதிக்கப்பட மாட்டாது.

மேலே அளித்துள்ள விருப்பத் தேர்வை நீங்கள் எடுத்துக் கொள்ளாத பொழுது, பாலிசியானது காப்பீடு பாதுகாப்பு மற்றும் ரைடர் பாதுகாப்பு, ஏதாவது இருந்தால், அவை இல்லாமல் தொடரும் மற்றும் நிதியானது தொடர்ந்து தொடரா பாலிசி நிதியில் முதலீடு செய்தபடி இருக்கும். முடக்கப்பட்ட காலத்ததின் இறுதியில், தொடரா பாலிசி நிதியில் உள்ள உங்கள் தொகை உங்களுக்கு வழங்கப்படும் மற்றும் பாலிசி முடிவு பெறும்.

ஒரு வேளை பாலிசியை நீங்கள் சரண்டர் செய்தால், தொடரா பாலிசி நிதியில் உள்ள உங்கள் தொகை முடக்கப்பட்ட காலம் அல்லது சரண்டர் நாள், ஆகிய இரண்டின் பின் வருவனவற்றின் பொழுது, உங்களுக்கு வழங்கப்படும்.

## முடக்கப்பட்ட காலத்தின் பொழுது தொடராமல் போன பாலிசியை புதுப்பித்தல்

புதுப்பித்தல் காலத்திற்குள், பாலிசியை நீங்கள் புதுப்பிக்கும் பொழுது, பாலிசியானது புதுப்பிக்கப்பட்டு காப்பீடு பாதுகாப்பை மறு அமர்த்தல் செய்து, தொடரா பாலிசி நிதியில் இருந்து நீங்கள் தேர்ந்தெடுத்த பல்வேறு நிதிகளில் முதலீடும் செய்யப்படும். தொடரா பாலிசி நிதியில் பொருந்தத்தக்க கட்டணங்கள் கழித்துக் கொள்ளப்படும்.

புதுப்பித்தலின் பொழுது நாங்கள்:

- செலுத்தாத அனைத்து உரிய வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியங்களை எந்தவித வட்டி அல்லது கட்டணம் இல்லாமல் பெற்றுக் கொள்வோம்.
- தொடரா காலத்தின் பொழுதான பொருந்தத்தக்க பாலிசி நிர்வாகக் கட்டணம் மற்றும் பிரீமிய ஒதுக்கீடு கட்டணம் ஆகியவை விதிக்கப்படும். உத்திரவாதம் தொடர்ந்து பொருந்துமானால், உத்திரவாதக் கட்டணம், ஒரு வேளை பொருத்தமானால் அவை தொடரா காலத்திற்கு கழித்துக் கொள்ளப்படும்.
- வேறு எந்தக் கட்டணமும் விதிக்கப்பட மாட்டாது
- பாலிசி தொடராமல் போன சமயத்தில் கழித்துக் கொள்ளப்பட்ட தொடராக் கட்டணம் நிதியில் மீண்டும சேர்க்கப்படும்.

ஒரு முறை தொடரா பாலிசி புதுப்பிக்கப்பட்டால், பிறகு பாலிசி முழு காப்பீடு பாதுகாப்பிற்காக இருக்கும் வகை பொருந்தத்தக்க அனைத்து கட்டணங்களும் அவ்வப்பொழுது விதிக்கப்படும்.

## B. முடக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு பாலிசி தொடராமை

கருணைக் காலம் முடியும் முன்னர் ஒரு வேளை வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியத்தை நாங்கள் முழுமையாகப் பெறாவிட்டால், மேலும் அப்படிப்பட்ட முறை தவறுதல் முடக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு நிகழுமாயின், உங்கள் பாலிசியானது, பெய்ட் அப் ரொக்க உத்திரவதாதத்துடன் ஒரு குறைக்கப்பட்ட பெய்ட் அப் பாலிசியாக மாற்றப்படும், அதாவது

**பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம் =** ரொக்க உத்திரவதாம் x (பெறப்பட்ட வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியங்களின் எண்ணிக்கை) / (பாலிசியின் கீழ் செலுத்த வேண்டிய வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியங்களின் மொத்த எண்ணிக்கை)

பாலிசியானது குறைக்கப்பட்ட பெய்ட் அப் நிலையில் ரைடர் பாதுகாப்பு, ஏதாவது இருந்தால் அவை இல்லாமல் தொடரும். புதுப்பித்தல் காலத்தின் பொழுது அனைத்துக் கட்டணங்களும் விதிக்கப்படும். இருந்தபோதிலும், இறப்புக் கட்டணமானது குறைக்கப்பட்ட பெய்ட் அப் ரொக்க உத்திரவாதத்தின் அடிப்படையில் மட்டுமே கழித்துக் கொள்ளப்படும். செலுத்தாத முதல் வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் நாங்கள் உங்கள் பாலிசியின் நிலையினை தெரியப்படுத்துவோம் மேலும் உங்களுக்கு கீழ்க்கண்ட விருப்பத் தேர்வினையும் வழங்குவோம்:

i) புதுப்பித்தல்* காலத்திற்குள் பாலிசியை புதுப்பித்துக் கொள்ளவும்; அல்லது
ii) முழுமையாகப் பெறுதல் (வித்டிராயல்) அதாவது பாலிசியை சரன்டர் செய்வது

உங்கள் பாலிசியை நீங்கள் புதுப்பித்துக் கொள்ள தேர்வு செய்து ஆனால் புதுப்பித்தல் காலத்தில் செய்ய முடியாவிட்டால், இந்த நிதி மதிப்பானது புதுப்பித்தல் காலத்தின் இறுதியில் உங்களுக்கு வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி எந்த விருப்பத் தேர்வையும் நீங்கள் தேர்வு செய்யாவிட்டால், உங்கள் பாலிசியானது குறைக்கப்பட் பெய்ட் அப் நிலையில் தொடர்ந்து இருக்கும். புதுப்பித்தல் காலத்தின் இறுதியில், நிதியில் உள்ள உங்கள் தொகையானது உங்களுக்கு வழங்கப்படும் மற்றும் பாலிசி முடிவு பெறும்.
ஒரு வேளை நீங்கள் பாலிசியை சரண்டர் செய்தால், நாங்கள் உங்களுக்கு சரண்டர் மதிப்பை வழங்குவோம்.

## முடக்கப்பட்ட காலத்திற்குப் பிறகு தொடரா பாலிசியை புதுப்பித்தல்

ஒரு வேளை நீங்கள் புதுப்பித்தல் காலத்திற்குள் பாலிசியை புதுப்பிக்க தேர்வு செய்தால், பிறகு புதுப்பித்தல் காலத்திற்குள் எந்நேரத்திலும் நீங்கள், பாலிசியை எங்களுக்கு எழுத்து மூலம் நோட்டீஸ் அளித்து புதுப்பித்துக் கொள்ளலாம். இது கீழ்க்கண்டவற்றிற்கு உட்பட்டது:

நிறுவனத்தின் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடப்பில் இருக்கும், எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) பாலிசியின்படி, காப்பீட்டாளர் தொடர்ச்சியாக காப்பீடு செய்து கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரத்தை எங்கள் திருப்திக்கு ஏற்ப உங்கள் செலவில் நீங்கள் சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு அமையும். பாலிசியை புதுப்பிப்பதற்கு முன்னர் நாங்கள் கூடுதல் விவரங்களை பெறலாம் மற்றும் புதுப்பித்தலை மறுக்கும் அல்லது கூடுதல் இறப்புக் கட்டணங்களை விதிக்கும் உரிமையையும் நாங்கள் தக்க வைத்துள்ளோம். புதுப்பித்தல் காலத்தின் பொழுது, நிறுவனமானது அனைத்து உரிய மற்றும் செலுத்தாத அனைத்து பிரீமியங்களையும் மற்றும் அனைதது உரிய கட்டணங்களுடன் எந்தவித வட்டி அல்லது கட்டணம் இன்றி பெறப்படும் மற்றும் அசல் ரொக்க உத்திரவாதம் மறு அமர்த்தல் செய்யப்படும்.

புதுப்பித்தலின் பொழுது நாங்கள்:

- செலுத்தாத அனைத்து உரிய வரையறை உள்ள / ரெகுலர் பிரீமியங்களை எந்தவித வட்டி அல்லது கட்டணம் இல்லாமல் பெற்றுக் கொள்வோம் மற்றும் பிரீமிய ஒதுக்கீடு கட்டணங்களை விதிப்போம்

- ரைடர், ஏதாவது இருந்தால், அவற்றையும் நீங்கள் புதுப்பித்துக் கொள்ளலாம், இவை எங்கள் குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) பாலிசிக்கு உட்பட்டு அமையும்

- வேறு எந்தக் கட்டணமும் விதிக்கப்பட மாட்டாது

## 6. நிகர சொத்து மதிப்பு (என்ஏவி) கட்டணம்:

அவ்வப்பொழுது IRDAI வின் வழிகாட்டுதல்களின்படி என்ஏவியானது தினமும் கணக்கிடப்படும். தற்பொழுதைய IRDAI வின் வழிகாட்டுதல்களின்படி நிதிகளின் என்ஏவியானது கீழ்க்கண்ட முறைப்படி கணக்கிடப்படுகிறது:

நிதி வைத்திருக்கும் முதலீடுகளின் சந்தை மதிப்பு
+
நடப்பு சொத்துக்களின் மதிப்பு - நடப்புக் கடன் தொகையின் மதிப்பு மற்றும் புரொவிஷன்ஸ், ஏதாவது இருந்தால்

மதிப்பீட்டு நாளில் உள்ள யூனிட்டுகளின் எண்ணிக்கை (யூனிட்டுகள் ஒதுக்கீடு / ரிடெம்ஷனுக்கு முன்னர்)

7. பாலிசி துவங்கிய நாளில் உள்ள என்ஏவியின் அடிப்படையில் முதல் பிரீமிய ஒதுக்கீடு செய்யப்படும்.
8. பிரீமியமானது ஒரு வேளை முன்னரே பெறப்பட்டிருந்தாலும், அது உரிய நாளிலேயே அட்ஜஸ்ட் செய்யப்படும். மேலும், பாலிசி அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, செலுத்த வேண்டிய ரெகுலர் பிரீமியத் தொகைக்குக் குறைவாக அவிவா எந்தத் தொகையையும் ஒப்புக் கொள்ளாது.
9. பரிவர்த்தனை கோரிக்கைகள் (மாற்று, பெறுதல், சரன்டர் மற்றும் உள்ளூர் காசோலை, வரைவேலை மூலம் செலுதத்தப்படும் ரெனிவல் பிரீமியங்கள், மாற்றுக்கள் இன்னபிற) கட் ஆஃப் நேரத்திற்கு முன் பெறப்பட்டால் அதே நாள் என்ஏவியில் ஒதுக்கீடு செய்யப்படும் மற்றும் கட் ஆஃப் நேரத்திற்கு பின் பெறப்படுபவை அடுத்த நாள் என்ஏவியில் ஒதுக்கீடு செய்யப்படும். கட் ஆஃப் நேரமானது அவ்வப்பொழுது IRDAI வின் வழிகாட்டுதல்களின்படி இருக்கும், அது தற்சமயம் மாலை 3:00 வெளியூர் காசோலை மூலமாக பிரீமியம் பெறப்பட்டால், கிளியரன்ஸ் தேதி அல்லது உரிய நாள், ஆகிய இரண்டில் பின்னர் வரும் தேதியில் உள்ள என்ஏவி பிரயோகிக்கப்படும்.
10. அவிவாவில் இருந்து இந்த பாலிசியில் கடன் அளிக்கும் ஷரத்து எதுவும் இல்லை.
11. குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதித் (அன்டர்ரைடிங்) தேவைகள் மற்றும் செலுத்தாத அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்துவதற்கு உட்பட்டு பாலிசி புதுப்பிக்கப்படும்.
12. காப்பீட்டுச் சட்டம் 1938, அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு ஏற்ப, பிரிவு 38 மற்றும் 39 இன் கீழ் அதன் ஷரத்துக்களுக்கு உட்பட்டு அசைன்மென்ட் மற்றும் நாமினேஷன் அனுமதிக்கப்படும்.
13. காப்பீடு ஒபபுக் கொள்ளப்பட்டு மற்றும் பிரீமியத் தொகையை முழுமையாகப் பெறும் வரை, அவிவா எந்த வித இழப்பீடு கோரலுக்கும் பொறுப்பாளி ஆகாது.

# நீக்குதல்கள்

## மரணம் தற்கொலை மூலமாக இருக்கும் பொழுது:

- பாலிசி துவங்கப்பட்ட நாள் முதல் அல்லது புதுப்பித்தில் நாள் முதல் 12 மாதங்களுக்குள் ஒரு வேளை மரணமானது தற்கொலை மூலமாக இருந்தால், மரணச் செய்தி தெரிவிக்கப்பட்ட நாளில் உள்ள நதி மதிப்பானதைப் நாமினி அல்லது பயனாளர் தகுதி பெறுகிறார்.
- நிதி மேலாண்மைக் கட்டணம் மற்றும் உத்திரவாதக் கட்டணம், ஏதாவது இருந்தால், அவை தவிர வேறு கட்டணங்கள் ஏதாவது மரண நாளிற்குப் பிறகு பெறப்பட்டிருந்தால், அவை மரணச் செய்தி தெரிவிக்கப்பட்ட நாளில் உள்ள நிதி மதிப்பில் மீண்டும் சேர்க்கப்படும்.
- மேற்கூறிய நிதி மதிப்பு வழங்கப்பட்ட உடன் பாலிசி முடிவு பெறும்.

## விபத்தின் மூலம் ஏற்படும் மரணம்:

பாலிசி காலத்தின் பொழுது, விபத்தின் மூலம் ஏற்படும் மரணத்தின்* பொழுது, ஒரு வேளை ஆயுள் காப்பீடட்டாளருக்கு விபத்தின் மூலம் ஏற்பட்ட மரணம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கீழே அளிக்கப்பட்டுள்ள காரணத்தினால், நடந்திருந்து அல்லது மோசம் அடைந்திருந்தால் கூடுதல் அனுகூலத் தொகையானது, வழங்கப்பட மாட்டாது

i. மது அருந்தி இருந்தால் அல்லது
ii. மருந்தின் துஷ்பிரயோகம் மற்றும் மருத்துவர் பரிந்துரைக்காத பிற மருந்துகளை எடுத்துக் கொள்ளதல் அல்லது
iii. ஆயுள் காப்பீட்டாளர் ஏதாவது குற்றச் செயல் புரிந்திருந்தால், அல்லது
iv. வேண்டும் என்றே சுயமாக ஏற்படுத்திக் கொள்ளும் காயங்கள், தற்கொலை அல்லது தற்கொலை முயற்சி, அல்லது

v. ஒரு வணிக ரீதியாக உரிமம் பெற்ற ஒரு பயணிகளின் விமானத்தில், ஒரு பயணியாக, கேபின் குழுவினர் மற்றும் பைலட் அல்லாத எந்த ஒரு விமானப் போக்கு வரத்தும் அல்லது

vi. தடகளம் மற்றும் நீச்சல் தவிர வேறு எந்தவிதமான பந்தயத்தில் ஈடுபடுதல் அல்லது

vii. எந்தவிதமான போர், படையெடுப்பு, யுத்தம் (போர் அறிவிக்கப்பட்டோ அல்லது இல்லாமலோ), உள்நாட்டுக் கலகம், கிளர்ச்சி, கலவரம், சமூகச் சீர்கேடு, ஆட்சி எதிர்ப்பு, இராணுவ அல்லது பலாத்காரமாக பிடுங்கிக் கொள்ளும் அதிகாரம் அல்லது வேண்டும் என்றே வன்முறைச் செயலில் ஈடுபடுதல் அல்லது

viii. ஒரு அணு விபத்தின் மூலம் ஏற்படும் கதிரியக்க மாசுபாடு அல்லது

ix. அபாயகரமான விளையாட்டு அல்லது பொழுது போக்குகளில் பங்கு பெறுதல், பின்வருவனவற்றை சேர்த்து அதாவது பாராசூட்டிங், பாட்ஹோலிங், மலையேறுதல் மற்றும் சூடான காற்றில் இயங்கும் பலூனில் செல்வது.

* விபத்து என்றால், திடீரென்று, எதிர்பாராதவிதமாக மற்றும் விருப்பம் இன்றி நிகழ்வது அவை வெளிப்புற, காணக்கூடிய மற்றும் கோரமான வழிகளில் ஏற்படுவது.

மருத்துவர் என்றால், ஒரு நபர், எந்த மாநிலத்தின் மெடிகல் கவுன்சில் அல்லது மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா அல்லது கவுன்சில் ஃபார் இந்தியன் மெடிசின் அல்லது இந்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கங்கள் அமைத்த ஹோமியோபதி ஆகியவை வழங்கிய, செல்லுபடியாகக் கூடிய பதிவை வைத்திருத்தல் வேண்டும் மற்றும் அதன் மூலம் அதன் அதிகார வரம்பிற்குள் மருத்துவம் பார்ப்பதற்கு தகுதி பெறுகிறார்; மற்றும் அவர் அந்த வாய்ப்புக்குள் மற்றும் உரிமத்தின அதிகார வரம்பிற்குள் இருத்தல் வேண்டும்.

**மருத்துவர் என்பவர் கீழ்க்கண்டவற்றில் இருத்தல் கூடாது:**

a) பாலிசிதாரரின் துணைவர், தந்தை (வளர்ப்புத் தந்தையையும் சேர்த்து) அல்லது தாயார் (வளர்ப்புத் தாயையும் சேர்த்து), மகன் (வளர்ப்பு மகனையும் சேர்த்து), மகனின் மனைவி, மகள் (வளர்ப்பு மகளையும் சேர்த்து), மகளின் கணவர், சகோதரன் (வளர்ப்பச் சகோதரனையும் சேர்த்து) மற்றும் சகோதரி (வளர்ப்புச் சகோதரியையும் சேர்த்து) அல்லது

b) இந்தப் பாலிசியின் கீழ் உள்ள ஆயுள் காப்பீட்டாளர் / பாலிசிதாரர்

## அறிக்கை

- அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்பது காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மட்டுமே மற்றும் அவிவா அஃப்ளுயன்ஸ் என்பது யூனிட்டுடன் இணைந்த காப்பீட்டு ஒப்பந்தத்தின் பெயர் மட்டுமே மற்றும் அது எந்த விதத்திலும் ஒப்பந்தத்தின் தரத்தையோ, அதன் எதிர்காலப் பயனையோ அல்லது வருமானத்தையோ குறிக்காது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள பல்வேறு நிதிகளானது நிதிகளின் பெயர் மட்டுமே மற்றும் அது எந்த விதத்திலும் இந்தத் திட்டத்தின் தரத்தையோ, அதன் எதிர்காலப் பயனையோ அல்லது வருமானத்தையோ குறிக்காது.
- இவை சார்ந்த ஆபத்துக்கள் மற்றும் பொருந்தத்தக்க கட்டணங்கள் ஆகியவற்றை காப்பீட்டு முகவர் அல்லது இடைத் தரகர் அல்லது பாலிசி ஆவணம் அல்லது காப்பீட்டாளரிடம் இருந்து தயவு செய்து தெரிந்து கொள்ளுங்கள்.

## ஆபத்துக் காரணிகள்

- யூனிட்டுடன் இணைந்த ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் மரபுவழி காப்பீட்டுத் திட்டங்களில் இருந்து வேறுபட்டது மற்றும் அவை ஆபத்துக் காரணிகளுக்கு உட்பட்டது.
- யூனிட்டுடன் இணைந்த காப்பீட்டு பாலிசிகளில் செலுத்தப்பட்ட பிரீமியமானது மூலதன சந்தையுடன் சம்மந்தப்பட்ட முதலீட்டு ஆபத்துக்களுக்கு உட்பட்டது மற்றும் யூனிட்டுகளின் என்ஏவி, திட்ட செயல்பாடுகளின் மற்றும் மூலதன சந்தையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளின் அடிப்படையில் மேலே அல்லது கீழே செல்லலாம். காப்பீட்டாளர் / பாலிசிதாரர் அவரது முடிவிற்கு அவரே பொறுப்பாளி ஆகிறார்.
- யூனிட்டுடன் இணைந்த திட்டங்கள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை மற்றும் இந்த முதலட்டுத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறுவதற்கு எந்தவித உறுதி அல்லது உத்திரவாதமோ கிடையாது.
- முதலீட்டுத் திட்டங்களின் கடந்தகால செயல்பாடுகள் எதிர்கால செயல்பாடுகளை எந்த விதத்திலும் குறிக்கவில்லை. இந்தத் திட்டத்தில் உள்ள முதலீட்டாளர்களுக்கு எந்தவித உத்திரவாத / உறுதியான வருமானமும் வழங்கப்படவில்லை.

## காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 41 & 45

### காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 41

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 41 இன் ஷரத்துக்கள் மற்றும் அவை அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு உட்பட்டு பிரயோகிக்கப்படுகிறது.

**தற்பொழுதைய ஷரத்துக்களின்படி:**

(1) காப்பீட்டாளரின் அட்டவணை அல்லது வெளியிடப்பட்ட விற்பனை அறிக்கையில் அனுமதியளிக்கப்பட்ட தள்ளுபடியைத் தவிர எந்த ஒரு நபரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நபரையும் எந்தவித ஆயுள் அல்லது இந்திய நாட்டில் உள்ள சொத்துக்களை காப்பீடு செய்து கொள்ள, தொடர, புதுப்பிக்க அல்லது புதிதாக எடுக்க, முழுமையாக அல்லது பகுதி கமிஷனை அல்லது பாலிசியில் கூறப்பட்டுள்ள பிரீமியத்தில் தள்ளுபடி செய்து தூண்டக் கூடாது அல்லது எந்த ஒரு நபரும் ஒரு பாலிசியை எடுத்துக் கொள்ள அல்லது ரெனிவல் செய்ய, அல்லது தொடர்வதற்கு எந்தவித தள்ளுபடியையும் பெறக் கூடாது.

(2) இந்தப் பிரிவின் ஷரத்துக்களை மீறும் எந்த ஒரு நபருக்கும் அபராதம் விதிக்கப்படும் அது 10 இலட்சம் வரை நீட்டிக்கப்படலாம்.

### காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 45

காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 45 இன் ஷரத்துக்கள் மற்றும் அவை அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு உட்பட்டும் ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படுகிறது.

தற்பொழுதைய ஷரத்துக்களின்படி, ஒரு பாலிசியை தவறான கூற்று உள்ளதாகக் கூறி மூன்று வருடங்கள் கழித்து கேள்வி கேட்க முடியாது.

## அவிவா பற்றி

அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் என்பது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஒரு யூகேவை அடிப்படையாகக் கொண்ட ஒரு குழு, அதனுடனான இந்திய உறவு 1834 வரை பின்நோக்கிச் செல்லும், ஆகிய இரண்டின் கூட்டுறவு ஆகும். அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸை தேர்ந்தெடுத்ததன் மூலம், நீங்கள் உலகின் பழமையான காப்பீட்டுக் குழு ஒன்றின், அதன் வரலாறு 1696 வரை பின்நோக்கிச் செல்லும், நிர்வாக அனுபவத்தைப் பெறுகிறீர்கள். இன்று. அவிவா 33 மில்லியன் வாடிக்கையாளர்களை 16 சந்தைகளில் (2016) கொண்டுள்ளது.

## கேள்விகள் மற்றும் புகார்கள்

மேலும் கூடுதல் விவரங்கள், கேள்விகள் அல்லது புகார்களுக்கு, தயவு செய்து கீழ்க்கண்ட எண்ணில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:
1800 180 2244 (BSNL மற்றும் MTNL உபயோகிப்பாளர்களுக்கு இலவசம்) அல்லது
0124-2709046 அல்லது SMS "Aviva" என்று 5676737 என்ற எண்ணிற்கு அனுப்பவும்
ஃபேக்ஸ் எண்: 0124-2709007

**இணையதளம்:** www.avivaindia.com

**அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் (IRDA of India Reg. No. 122)**

இது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் இடையேயான ஒரு கூட்டு முயற்சியாகும்

**தலைமை அலுவலகம்**
அவிவா டவர், செக்டார் ரோடு, கோல்ஃப் கோர்ஸ் எதிரில், DLF ஃபேஸ்-V, செக்டார்-43, குர்காவ் - 122 003

**பதிவு அலுவலகம்:**
2வது மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி - 110 001

**CIN No.** U66010DL2000PLC107880

**மின் அஞ்சல் ID:** customerservices@avivaindia.com

**போலியான தொலைபேசி அழைப்பு மற்றும் கற்பனையான/மோசடியான சலுகைகளில் இருந்து ஜாக்கிரதை:**

IRDA ஆஃப் இந்தியா பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவது என்னவென்றால்:

- IRDA ஆஃப் இந்தியா அல்லது அதன் அதிகாரிகள், எந்த விதமாக காப்பீடு அல்லது நிதித் திட்டங்கள் அல்லது இன்வெஸ்ட் பிரீமியங்கள் ஆகியவற்றின் விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.
- IRDA வ் இந்தியா எந்தவித போனஸ் அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை. அப்படிப்பட்ட தொலைபேசியை பெறும் பொதுமக்கள், தொலைபேசி அழைப்பின் விவரங்கள் மற்றும் எண் ஆகியவற்றைக கொண்டு காவல் துறையில் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவிவா அஃப்ளுயன்ஸ் என்பது ஒரு தனிநபர், யூனிட்டுடன் இணைந்த பங்கு பெறாத ஆயுள் காப்பீட்டுத் திட்டம். மேலே அளிக்கப்பட்டுள்ள வர்த்தகச் சின்னம் அவிவா பிரான்ட்ஸ் லிமிடெடுக்கு சொந்தமானது மற்றும் அது உரிமம் பெற்று அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டால் வழங்கப்படுகிறது. வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டத்தின்படி அமையும் மற்றும் அவை மாற்றத்திற்கு உட்பட்டது. UIN: 122L111V02, Advt. No.: Jan 45/20.